முருகப்பெருமான் துணை

**மகான் பூனைகண்ணார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.08.2023**, புதன்கிழமை

1. வள்ளலாய் அவதாரம் எடுத்து
வையகம் காத்திடும் ஞானியே
நல்லுலகம் அமைய வேண்டி
ஞானிகள் பூசை முறை தந்த
2. தந்த ஆறுமுக அரங்கனே
தருமனே உன் பெருமை கூறி
சிந்தைபட அறிவுரை ஆசி
சோபகிருது ஆண்டு நள்ளி திங்கள் தன்னில்
3. தன்னிலே அறுநான்கு திகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 24 ம் நாள், 09.08.2023, புதன்கிழமை)
தக்கபடி பூனைகண்ணார் யானும்
மண்ணுலகம் வளமுற உரைப்பேன்
மாதவசி அரங்கனின் தருமம்
4. தருமம் பெருகிட எங்கும்
தனிப்பெருஞ் சக்தி பரவி
வறுமை தனை விரட்டும்படி
வையகம் இயற்கை வளம் காணும்
5. காணவே வானவ சக்திகள்
கருணை கொண்டு அருளாக
தானதரும வலிமைக்கு இறங்கி
தரணிக்கு வளம் பலம் சேர்ப்பர்
6. சேர்க்கவே பஞ்ச பூதங்களும்
செப்பிடுவேன் அரங்கன் அவதார
நேர்த்தி கண்டு இறங்கியே
நீதிகாத்து அருள் புரியும்

7. புரியவே அரங்கனை நோக்கி
புண்ணியவான்களாக மக்கள்
வருமுலகில் வந்து சேர்ந்துமே
வள்ளலாக தருமவான்களாக மக்கள்
8. மக்களெல்லாம் தேறியே
மகான்களாவர் அரங்கனின்
ஆக்கமான வழி காட்டலில்
அறிவுத் தெளிவு திடம் கண்டு
9. கண்டுமே கலிவாழ் மக்கள்
கருணை ஜீவத்தயவு எனும்
தொண்டுநிலை பெருகி நன்கு
தெய்வீக ஞானபலம் அடைவர்
10. அடையவே அரங்கன் பலமும்
அவதார நோக்கம் தானும்
தடையற உலகெல்லாம் பரவி
தரணி எல்லா வகையும்
11. வகையும் மாற்றம் கண்டு
வளமும் நலமும் தரும் தலைமை
மிகைபட ஞான ஆட்சி அமைந்து
மேலான நிலை உலகம் காணும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—